Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **S.C. No. 1 of 2025**
Sessions

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW1(LW1)** |
| Name | : திருமதி. பெருமாளி |
| Father's Name | : முனிராஜ் |
| Village | : பென்னாகரம் |
| Taluk | : |
| Calling | : கூலி வேலை |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.08.2025.

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

__முதல் விசாரணை:__

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னுடை மகன் அசோக்குமார். என் மகன் அசோக்குமாருக்கு 14 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைப்பெற்றது. என் மருமகள் பெயர் சுகன்யா. அவர் பிக்கனள்ளி கிராமத்தை சார்ந்தவர். என் மகனுக்கும் மருமகளுக்கும் சண்டை வந்துக்கொண்டே இருந்தது. அப்போது நான் என் மகனிடம் எதற்காக சண்டைப்போட்டு கொண்டிருக்கிறிர்கள் என்று கேட்டேன். அதற்கு என் மகன் அம்மா என்னுடைய மனைவி எதிர் வீட்டை சார்ந்த சத்தியமூர்த்தியிடம் அடிஅடிக்கு போனில் பேசிக்கொண்டிருந்தார் அதனால்

எங்களுக்குள் சண்டை ஏற்படுகிறது என்று கூறினார். பின்னிட்டு நான் சத்தியமூர்த்தியிடம் சென்று ஏன் என்னுடைய மருமகளிடம் செல்போனில் பேசுகிறாய், அதனால் என் மகனுக்கும், மருமகளுக்கும் பிரச்சனை ஏற்படுகிறது என்று கேட்டேன். அதற்கு அவன் நான் அப்படி தான் பேசுவேன் என்றாவது ஒரு நாள் உன் மகனை கொலை செய்துவிட்டுக்கூட உன்னுடைய மருமகளிடம் வழுவேன் என்று கூறுவான். என் மகனுக்கு மூன்னு சிறு வயது குழந்து உள்ளது. என் மகன் சென்டிரிங் வேலை செய்து வந்தான். இப்படி இருக்கையில் போன வருடம் தீபாவளி அன்று என் மருமகள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவருடைய தாயார் வீடான பிக்கனள்ளிக்கு சென்றுவிட்டாள். என் மருமகள் என் மகனுக்கு போன் செய்து அவனையும் பிக்கனள்ளிக்கு வர சொன்னதன் பேரில் என் மகனும் சென்றுவிட்டான். அந்த சமயத்தில் என் மகன் என்னிடம் நான் பிக்கனள்ளி வந்துவிட்டேன். பண்டிகையை முடித்துவிட்டு வீட்டிற்கு வருகிறேன் என்று கூறினான். அடுத்த நாள் 01.11.2024 இரவு பிக்கனள்ளியில் திருவிழா நடைப்பெற்றது. அச்சமயத்தில் ஆஜர் எதிரி சத்தியமூர்த்தி அவருடைய நண்பர் அரிபிரசாந்த் உடன் பிக்கனள்ளிக்கு சென்று என் மகன் மாமியார் வீட்டில் இருந்து திருவிழாவில் இருந்த என் மகனுக்கு போன் செய்து வாடா நான் உன் மாமியார் வீட்டிற்கு இருக்கிறேன் என்று அழைத்ததன் பேரில் என் மகன் அங்கு சென்ற போது கத்தியால் மூன்று இடத்தில் குத்தி என் மகனை கொலை செய்து விட்டதாக என் தங்கை மகன் விஜய் என்னிடம் போனில் தகவல் சொன்னார். நான் என் மகனின் உடலை பார்ப்பதற்காக அதிகாலை 5.00 மணிக்கு தருமபுரி GH க்கு வந்தேன். என் மகனின் உடலை பார்த்துவிட்டு கேஸ் கொடுப்பதற்காக மகேந்திரமங்கலம் காவல் நிலையம் சென்று நான் சொல்ல சொல்ல என் தங்கை மகன் விஜய் புகார் மனுவை எழுதினார். அந்த புகார் மனுவை காவல் நிலையத்தில்

கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ–1 ஆகும். பின்னிட்டு காவல் துறையினர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வந்து என் மகனின் உடல் பிரேத விசாரணை செய்து என்னை சாட்சியாக இருக்க சொல்லி கையெழுத்து பெற்றும் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு, என் மகனின் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்ததார்கள். என்னை போலீஸார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

என்னுடைய மகன் இரவு 10.00 மணி அளவில் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். 8.00 மணிக்கு எதிரி குத்தி விட்டு சென்றதாக கூறினார்கள். பிக்கனள்ளிக்கு செல்லவில்லை. நேரடியாக மருத்துவமனைக்கு தான் சென்றேன். என்னுடைய மகன் உடல் மருத்துவமனையில் உள்ளதாக கூறினார்கள் எத்தனை மணிக்கு எடுத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு என்னுடைய மகனை எடுத்து சென்றார்களா என்று எனக்கு தெரியாது. எனது மகனின் உடலை யார் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. கூர்மையான கத்தியால் குத்தி விட்டதாக கூறினார்கள் அந்த கத்தியை நான் பார்க்கவில்லை. என்னுடைய மருமகள் தற்போது எங்கு உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய மகனின் குழந்தைகள் என்னிடம் தான் உள்ளது. என் மகனின் குழந்தைகள் அவர்களாக என்னை தேடி வந்துவிட்டார்கள். வழக்கு சம்பவ தேதி அன்று என் மருமகளுடன் இரண்டு குழந்தைகள் பிக்கனள்ளிக்கு சென்றுவிட்டது. ஒரு குழந்தை என்னிடம் தான் இருந்தது. பின்னிட்டு நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்ற போது அந்த இரண்டு குழந்தைகள் என்னுடனே வந்துவிட்டது. மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் என்னுடை மருமகள் இருந்தாள். என் மகன் இறந்த செய்தி கேட்டு என் மருமகளுக்கு மயக்கம் ஏற்பட்டு அன்றை இரவு

1.30 மணி வரை பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்பதால் தான் இந்த வழக்கின் புகார் மனு என்னிடம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மருமகள் சுகன்யா மீது எந்த தவறும் இல்லை என்பதால் தான் அரசு தரப்பு சான்று ஆவணம் 1 ல் அவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகனை ஆஜர் எதிரி தொலைபேசியின் மூலமாக அழைக்கவும் இல்லை, கொலை செய்யவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கு குடிப்பழக்கம் உண்டு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 26.08.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.08.26 15:49:59 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.